(Under Section.173 BNSS)

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102173

1. District மாவட்டம் : Coimbatore PS: காவல்நிலையம் VBAC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 16/2024/AC/CB Date: நாள் 07.12.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(b), 7(b) r/w 12

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 02.12.2024 Date to : நாள் வரை 06.12.2024

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 08.00 hrs Time to : நேரம் வரை 08.00 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.12.2024 Time : நேரம் 10.45 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD V01-III Time : நேரம் 10.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் at about 25 km South-West

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி K.G.Chavadi RTO Check Post (Outgoing) Palakkadu Main Road, Coimbatore District

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. P. Sathishkumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Pandi

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Inspection Cell Inspector (g) Address : முகவரி O/o. Inspection Cell officer, Collectorate, Coimbatore district.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   (1) Tr. S. Kumar, S/o. Shanmugasundaram, Motor Vehicle Inspector (NT), K.G.Chavadi RTO Check Post (outgoing) Coimbatore.

   (2) Tmt. A. Roseline, W/o. Amulraj, Office Assistant, K.G.Chavadi (Incoming) Check post Coimbatore.

   (3) Tr. A. Suresh, age 38, S/o. Annamani, D.No. 12, Narayana Street, Pappanaickenpalayam, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted:-
Separate Sheets attached herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. M. Vijayalakshmi, Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Coimbatore on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 07/12/2024

[signature] 07/12/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 07.12.2024 @ 13.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Ezhilarasi
Rank: நிலை Inspector of Police, No. எண்
Vigilance and Anti-Corruption
Coimbatore
07.12.2024

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**<u>கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-</u>**

***கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 15/2024/AC/CB u/s. 7(b), 7(b) r/w. 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...***

இன்று 07.12.2024-ம் தேதி 10.45 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.P.சதீஸ்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 15/2024/AC/CB u/s. 7(b), 7(b) r/w.12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ஆக 11.45 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த புகாரின் விவரம் பின்வருமாறு; அனுப்புநர், P.சதீஸ்குமார், ஆய்வுக்குழு ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண். 255/2024/ஐ1, நாள்: 07.12.2024. திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம், கந்தேகவுண்டன்சாவடி, போக்குவரத்துத்துறை சோதனைச் சாவடி (வெளிச்செல்கை) - திடீர்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. 06.12.2024-ம் தேதி காலை சுமார் 06.00 மணியளவில் கோவை மாவட்டம் போக்குவரத்துத்துறை கந்தேகவுண்டன் சோதனைசாவடியில் (வெளிச்செல்கை) பணிபுரியும் அலுவலர் திரு.குமார், மோட்டார் வாகனஆய்வாளர் (Non-Technical) என்பவர் அவரது 4-ஷிப்ட் பணியின்போது வாகனங்களின் ஓட்டுநர்களிடம் இருந்தும், கிளீனர்களிடம் இருந்தும் வாகன வரி வசூல், E-Way Bill மற்றும் Trip Sheet ஆகியவற்றை சரிபார்த்து அவைகளில் சோதனைச் சாவடி சீல் வைக்க, கையூட்டாக வாங்கிய பணத்தை எடுத்து கொண்டு வாடகை காரில் அவரது சொந்த ஊரான சேலத்திற்கு பணிமுடித்து ஓய்வில் செல்வதாக

கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் பேரில் ஆய்வுக்குழு ஆய்வாளர் ஆகிய நான் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் புறப்பட்டு 06.12.2024-ம் தேதி காலை சுமார் 07.00 மணி முதல் மேற்படி சோதனைச்சாவடியை கண்காணித்துக் கொண்டிருந்த போது, சுமார் 07.40 மணிக்கு TN 48 BA 1864 TOYOTA ETIOS என்ற பதிவு எண்கொண்ட வாடகை கார் ஒன்று சோதனைச்சாவடிக்கு பக்கவாட்டில் நிறுத்தப்பட்டது. அதன் ஓட்டுநர் வண்டியிலிருந்து இறங்கி காத்திருந்தார். அதன் பின்பு சுமார் 07.50 மணியளவில் TN 66 Y 8544 என்ற பதிவு எண்கொண்ட மற்றொரு வெள்ளை நிற SWIFT DZIRE வாடகை கார் மேற்படி காரின் அருகில் நிறுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி TN 48 BA 1864 TOYOTA ETIOS பதிவு எண் கொண்ட காரின் ஓட்டுநர் காரின் டிக்கியின் அருகில் நின்றுவிட்டு சோதனைச்சாவடிக்குள் சென்றுவிட்டார். பின்னர் மேற்படி வெள்ளை நிற TN 66 Y 8544 Swift Dzire காரின் டிக்கியை திறந்து அதிலிருந்து பொருட்கள் மற்றும் Bag ஆகியவற்றை எடுத்து அவற்றை TN 48 BA 1864 என்ற காரின் கதவு மற்றும் டிக்கியை திறந்து வைக்கப்பட்டது. பின்னர் பெயர் கேட்டு தெரிந்துகொண்ட உள்வருகையில் அலுவலக உதவியாளராக பணிபுரியும் திருமதி.ரோஸ்லின் என்பவர் ஒரு வாடகை காரில் வெளிச்செல்கை சோதனைச்சாவடிக்கு வந்து இறங்கியபின் அந்த கார் சென்றுவிட்டது. பின்னர் TN 66 Y 8544 என்ற பதிவு கொண்ட SWIFT DZIRE காரும் அங்கிருந்து சென்றுவிட்டது. அதனை தொடர்ந்து மேற்படி TN 48 BA 1864 என்ற வாகனம் சோதனைச்சாவடியின் முன்புறம் நிறுத்தப்பட்டது. உடனே அந்த வாகனத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமார் முன்புற இருக்கையிலும், மேற்படி திருமதி.ரோசிலின் அவர்கள் பின்புற இருக்கையிலும் அமர்ந்தவுடன் கார் கிழக்கு நோக்கி சர்வீஸ் ரோட்டில் வந்து கொண்டிருந்த மேற்படி காரை ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான், கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் பின்தொடர்ந்து சோதனை சாவடியிலிருந்து சுமார் 100 மீட்டர் தூரத்தில் மேற்படி காரை நிறுத்தி காரில் இருந்தவர்களிடம்

நான் என்னையும் என்னுடன் இருந்த கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் காவல் குழுவினரை அறிமுகம் செய்தபின் TN 48 BA 1864 என்ற பதிவெண்கொண்ட காரில் இருந்தவர்களை விசாரிக்க காரிலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் தனது பெயர் திரு.குமார் என்றும் தான் (தொழில்நுட்பம் அல்லாத) மோட்டார் வாகன ஆய்வாளராக கந்தேகவுண்டன்சாவடி, போக்குவரத்து (வெளிச்செல்கை) சோதனை சாவடியில் பணிபுரிந்து வருவதாகவும் மற்றும் அங்கிருந்த பெண் தனது பெயர் ரோசலின் என்றும் தான் கந்தேகவுண்டன்சாவடி, போக்குவரத்து (உள்வருகை) சோதனை சாவடியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவர்களிடம் என்தலைமையிலான ஆய்வுக்குழுவினர் திடீர் சோதனை செய்யவந்துள்ள விபரத்தை தெரிவிக்க மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமார் என்பவர் மேற்படி இடம் பொதுசாலை என்றும், பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக இருக்கும் என்று தெரிவித்து அருகில் இருக்கும் அவர் பணிபுரியும் வெளிச்செல்கை சோதனைச்சாவடிக்கு அழைத்து சென்று சோதனை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொண்டதின்பேரில் அவர்கள் இருந்த காருடன் மேற்படி சோதனைச்சாவடிக்கு அழைத்து வரப்பட்டது. அதனை தொடர்ந்து சோதனைக்குழுவினர்களாகிய நாங்கள் எங்களை சுயபரிசோதனை செய்து காண்பித்து எங்களிடம் பணம் ஏதுமில்லை என்பதை உறுதிகொண்டோம். அதன் பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் பணம் குறித்து விசாரிக்க அவர் அமர்ந்திருந்த காரின் பின்புற இருக்கையில் வைத்திருந்த Bag-ல் வைத்திருப்பதாக தெரிவித்து அதிலிருந்து 4 காக்கிநிற கவர்களை காண்பித்தார். மேலும் மேற்படி ரோசலின் என்பவரிடம் பணம் குறித்து கேட்ட அவர் தனது கைப்பையில் வைத்திருக்கும் விபரத்தை தெரிவித்தார். எனவே மேற்படி திரு.குமார் மற்றும் திருமதி.ரோஸ்லின் ஆகியோரையும், அவர்களது உடமைகளையும் மேற்படி காரிலிருந்து எடுத்துக்கொண்டு மேற்படி சோதனைச்சாவடிக்கு வந்து அங்கு பணியிலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சே.ரகுராமன் என்பவரிடம் சோதனைவிபரம் தெரிவித்து அவரது அனுமதியின் பேரில் மேற்படி திரு.குமார் அவர்களை

அங்கிருந்த மோட்டார் வாகன ஆய்வாளரது அறையிலும், திருமதி.ரோஸ்லின் என்பவரை அந்த சோதனைச்சாவடியின் பிரதான அறையில் பதிவறைக்கு அருகிலும் அமரச்செய்யப்பட்டது. மேலும் அங்கு அலுவலில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சே.ரகுராமன், உதவியாளர் திரு.ஈஸ்வரன் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.கண்ணன் ஆகியோர்களை அவர்களது அலுவல் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேலும் அச்சோதனை சாவடியில் பதிவறையில் அட்டைப்பெட்டியுடன் சிதறி கிடந்த ரூ.3,500/- பணம் பற்றி விசாரிக்க அதுகுறித்து யாரும் சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமாரிடம் பணம் குறித்து விசாரிக்க Seema Bag என்று பெயர் எழுதப்பட்டிருந்த கருப்பு நிற லெதர் கைப்பையில் வைத்திருந்த நான்கு காக்கி கவர்களை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை பார்வையிட அதில் 02.12.24 என்ற தேதி குறிப்பிடப்பட்ட முதல் கவரை பார்வையிட்டதில் அதில் 500 X 120 = ரூ.60,000/-, பின்னர் 05.12.24 என்ற தேதி மற்றும் Kumar என்று பெயர் குறிப்பிடப்பட்ட, அதன் மறுபுறத்தில் 1 என்று பென்சிலால் குறிப்பிடப்பட்ட இரண்டாவது கவரை பார்வையிட்டதில் அதில் 500 X 200 = ரூ.1,00,000/-, பின்னர் 1 என்று பென்சிலால் குறிப்பிடப்பட்ட மூன்றாவது கவரை பார்வையிட்டதில் 500 X 200 = ரூ.1,00,000/-, பின்னர் நான்காவது கவரை பார்வையிட்டதில் 500 X 100 = ரூ.50,000/-, பின்னர் அவர் வைத்திருந்த Kalyan Jewellers KERALA – TAMILNADU என்று அச்சிடப்பட்ட கருநீலம் மற்றும் சிவப்பு நிற சிறிய பேக்கை பார்வையிட்டதில் அதில் 500 X 17 = ரூ.8,500/-, 200 X 12 = ரூ.2,400/-, 100 X 1 = ரூ.100/- மற்றும் தனியாக மடித்து வைத்திருந்த பணம் 100 X 20 = ரூ.2,000/- மொத்தம் ரூ.13,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி தொகைகள் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமார் அவர்களிடம் விசாரிக்க, மேற்படி கவரில் இருந்த தொகைகள் அனைத்தும் தான் (1). 02.12.2024-ம் தேதி (08.00 to 20.00), (2). 03.12.2024-ம் தேதி (08.00 to 20.00), (3). 04.12.2024/ 05.12.2024-ம் தேதி (20.00 to 08.00) மற்றும் 05.12.2024/06.12.2024-ம் தேதி

(20.00 to 08.00) ஆகிய நான்கு shift களில் வாகன ஓட்டுநர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட தொகை என்றும், மேற்படி Kalyan Jewellers பேக்கில் வைத்திருந்த ரூ.13,000/- பற்றி விசாரிக்க, அதில் ரூ.2,000/- தனது சொந்த பணம் என்றும் மீதிப்பணம் ரூ.11,000/- 06.12.2024-ம் தேதி காலை 06.00 மணிமுதல் வசூல் செய்த லஞ்சப்பணம் என்றும் தெரிவித்தார். அது குறித்து பணியாளர் கையிருப்பு பணப்பதிவேட்டினை ஒப்பிட்டு பார்த்த பொழுது அதில் 05.12.2024-ம் தேதியில் இவரது கணக்கில் ரூ.3,410/- என்று எழுதப்பட்டிருந்தது. அது குறித்து கேட்க, மேற்படி ரூ.3,410/-ல் தனது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாகவும், அதில் தனது சொந்த செலவு போக மீதியிருந்த தொகை ரூ.2,000/-ஐ தனியாக வைத்திருந்தாக தெரிவித்தார். எனவே தனியாக மடித்து வைக்கப்பட்டிருந்த பணம் ரூ.2,000/- மட்டும் அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி நான்கு கவரில் வைத்திருந்த பணம் ரூ.3,10,000/- மற்றும் மேற்படி ரூ.11,000/- லஞ்ச பணம் என்பதால் மோட்டார் வாகன ஆய்வளர் திரு.குமார் அவர்களிடமிருந்து மொத்தம் ரூ.3,21,000/- மற்றும் லஞ்சப்பணம் வைக்கப்பட்டிருந்த நான்கு காக்கி நிற கவர்கள் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து உள்வருகை சோதனை சாவடியின் அலுவலக உதவியாளர் திருமதி.ரோஸ்லின் என்பவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தான் வைத்திருந்த கைப்பையிலிருந்த சீருடையின் பாக்கெட்டில் இருந்த பணம் 500 X 48 = ரூ.24,000/-, தனியாக வைத்திருந்த 500 X 28= ரூ.14,000/- மற்றும் சிறிய மணிபர்சில் வைத்திருந்த 200 X 4 = ரூ.800/-, 100 X 2 = ரூ.200/-, 50 X 2 = ரூ.100/-, 20 X 15 = ரூ.300/-, மற்றும் 10 X 8 = ரூ.80/-, மொத்தம் ரூ.1,480/- ஆக மொத்தம் ரூ.39,480/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து அவரை விசாரிக்க சீருடையில் வைத்திருந்த பணம் ரூ.24,000/- 05.12.2024-ம் தேதி அவரது பணியின் போது வாகன ஓட்டுநர்களிடமிருந்து லஞ்சமாக வசூலித்த பணத்தில் தனது பங்கு தொகையாக கொடுத்த பணம் என்றும், தனியாக வைத்திருந்த மற்றொரு தொகை ரூ.14,000/-ஆனது 02.12.2024-ம் தேதி தனது பணியின் போது வசூல் செய்த லஞ்ச பணத்தில் தனக்கான பங்கு தொகை என்றும் தெரிவித்தார். மேலும் மணிபர்சில்

வைத்திருந்த பணம் ரூ.1,480/- தனது செலவு போக வைத்திருந்த சொந்த பணம் என்று தெரிவித்தார். அதுகுறித்து மேற்படி உள்வருகை சோதனை சாவடிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதின் பேரில் ஆஜர் படுத்தப்பட்ட வருகை பதிவேடு மற்றும் பணியாளர் பணம் கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் 05.12.2024-ம் தேதி திருமதி.ரோஸ்லின் என்பவரது கையிருப்பு தொகை ரூ.2,100/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி மணிபர்சில் வைத்திருந்த பணம் ரூ.1,480/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் கடந்த 02.12.2024 மற்றும் 05.12.2024-ம் தேதிகளில் திருமதி.ரோஸ்லின் என்பவரின் பங்காக கொடுக்கப்பட்ட மேற்படி பணம் ரூ.38,000/- விசாரணைக்காக கைப்பபற்றப்பட்டது. அப்போது மேற்படி TN 66 Y 8544 என்ற பதிவெண் கொண்ட காரை காலையில் ஓட்டி வந்த நபர் தகவலின் பேரில் TN 11 P 2149 என்ற TOYOTA ETIOS வாகனதுடன் சோதனைச்சாவடியில் சுமார் 14.00 மணியளவில் வந்தார். அவரை விசாரிக்க தனது பெயர் சுரேஷ் என்றும் தான் RK Tourist and Travels-ல் கடந்த ஒன்றரை வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும், அந்த ஒன்றரை வருடங்களாக சோதனை சாவடியில் பணிபுரியும் அலுவலர்களை வாடகைக்கு பிக்கப் மற்றும் டிராப் செய்து வருவதாகவும், மேலும் அங்கு மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரியும் திரு.குமார் அவர்கள் கடந்த ஆறு மாதங்களாக அவரது வேலையை முடித்த பின்னர் தனது காரில் அவரை பிக்கப் செய்து கொண்டு போகும்போது பணத்தை கவரில் போட்டு தன்னிடம் கொடுத்து பத்திரமாக வைத்திருக்குமாறும் அதை அவரது சொந்த ஊருக்கு செல்லும்போது தன்னிடம் மொத்தமாக வாங்கிக்கொள்வார் என்றும் தெரிவித்தார். அதற்காக தனக்கு வாடகையுடன் சேர்த்து தனியாக ரூ.500/- கொடுப்பார் என்றும் தெரிவித்தார். அந்த வகையில் 06.12.2024-ம் தேதி காலை அந்தசோதனைச்சாவடியில் அலுவலக உதவியாளராக பணிபுரியும் திரு.கண்ணன் என்பவரை அழைத்துக்கொண்டு சுமார் 07.50 மணிக்கு அங்கு வந்ததாகவும், மேலும் வரும் போது மோட்டார் வாகன ஆய்வாளர் ஏற்கனவே என்னிடம் மூன்று கவர்களில் கொடுத்து வைத்திருந்த பணம் மற்றும் அவரது மற்ற லக்கேஜ் உடன் சோதனை சாவடிக்கு வந்து அவர் ஊருக்கு அழைத்து

செல்ல அங்கு தயாராக இருந்த TN 48 BA 1864 என்ற காரில் அவர் கொடுத்த பணம் மற்றும் லக்கேஜ்களை இந்த சோதனை சாவடியில் வேலை செய்யும் திரு.கார்த்திக் என்பவர் உதவியுடன் மாற்றி வைத்ததாகவும் அப்போது திரு.கார்த்தி என்பவர் ஒரு கவரை தன்னிடம் கொடுத்து ஏற்கனவே நான் வைத்திருந்த கவர்களுடன் சேர்த்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமார் அவர்களின் துணிகள் வைத்திருக்கும் பையிலிருந்த பணப்பையில் வைத்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். அது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமார் அவர்களிடம் விசாரித்தபொழுது அவர் மேற்படி சுரேஷ் கூறியதை ஒத்துக்கொண்டார். பின்பு அவரிடம் காலையில் வந்த காரை பற்றி விசாரிக்க அந்த கார் Workshop-ல் உள்ளதாக தெரிவித்தார். அதனை சோதனை சாவடிக்கு எடுத்துவர அவரது உரிமையாளருக்கு தகவல் தெரிவித்ததின்பேரில் TN 66 Y 8544 என்ற பதிவெண் கொண்ட கார் சுமார் 15.20 மணியளவில் சோதனை சாவடியில் ஆஜர்படுத்தப்பட்டது. மேலும் இந்த திடீர் சோதனை குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமார், உள்வருகை சோதனை சாவடி அலுவலக உதவியாளர் திருமதி.ரோஸ்லின் மற்றும் TN 66 Y 8544 என்ற வாகனத்தின் ஓட்டுநர் திரு.சுரேஷ் ஆகியோர்களை நான் தனித்தனியாக விசாரித்து அவர்களது வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்திடீர் சோதனையின் போது வெளிச்செல்கை மற்றும் உள்வருகை சோதனை சாவடிகளின் வருகைப்பதிவேடு மற்றும் பணியாளர் பணம் கையிருப்பு பதிவேடு ஆகியவற்றின் நகல்கள் எடுக்கப்பட்டு, அந்தந்த சோதனை சாவடிகளில் அலுவலில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர்களான திரு.ரகுராமன் மற்றும் திரு.மோகன்ராஜ் ஆகியோர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனை / திடீர் சோதனை நடவடிக்கைகள் 06.12.2024-ம் தேதி 08.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 18.30 மணிக்கு முடிக்கப்பட்டு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து எடுத்துவரப்பட்ட கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிரின்ட் எடுக்கப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளையும் இத்துடன் இணைத்துள்ளேன். அதில்

மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து விவரங்களையும், குறிப்பிட்டுள்ளேன். மேலும் திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,62,500/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமார், மேற்படி வெளிச்செல்கை சோதனைச்சாவடி அலுவலக உதவியாளர் திருமதி.ரோஸ்லின் மற்றும் TN 66 Y 8544 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் ஓட்டுநர் திரு.சுரேஷ் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமார், உள்வருகை சோதனைச்சாவடியின் அலுவலக உதவியாளர் திருமதி.ரோஸ்லின் மற்றும் TN 66 Y 8544 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் ஓட்டுநர் திரு.சுரேஷ் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (Sdxxxx) P.சதீஸ்குமார், ஆய்வுக்குழு ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்டஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். இணைப்பு:- (1).திடீர் சோதனை நடவடிக்கைகள், (2).கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,62,500/-, (3). கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் (1 முதல் 4 வரை) மற்றும் (4). பதிவு செய்யப்பட்ட 3 வாக்கு மூலங்கள். Respected Madam, I have Received the complaint on 07.12.2024 at about 10.45 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.15/2024/AC/CB u/s.7(b), 7(b) r/w.12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at about 11.45 hrs (Sd. xxxxxx) R.எழிலரசி, 07/12/2024 Inspr. V&AC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் சிறப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

R. [signature] 07/12/2024

(R.எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.